**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | |
|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. CC 449 of 2025 |

| | |
|---|---|
| Depositions of PW -1 witness for ________ | Prosecution<br>Defence<br>Court |

Name : கோபாலகிருஷ்ணன்

Father's Name : த/பெ. ராஜு

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of February** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கோவை, பீடம் பள்ளி, ஸ்ரீ அம்மன் நகரில் குடியிருந்து கொண்டு தொழில் செய்து வருகிறேன். சம்பவ விபத்தில் இறந்த நிர்மலா தேவி எனது மனைவி. எனது மனைவி வளர்மதி பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வந்தார். கடந்த 18.12.2019 ஆம் தேதி மாலை சுமார் 04.45 மணியளவில் பள்ளி முதல்வர் எனக்கு போன் செய்து எனது மனைவி பாப்பம்பட்டி பிரிவு ரோட்டில் வாகன விபத்தில் அடிபட்டு இருப்பதாக தகவல் சொன்னார்கள். நான் சம்பவ இடம் சென்று பார்த்த பொழுது எனது மனைவியின் இருசக்கர வாகனம் சம்பவ இடத்தில் இருந்தது. எனது மனைவியின் உடல் மீது லாரி ஏறி இறங்கி லாரி கவிழ்ந்த நிலையில் இருந்தது. எனது மனைவி சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் இது சம்பந்தமாக நான் சூலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன்.

2. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்

**அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எனது மனைவியின் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை மேற்கொண்ட பொழுது உடன் இருந்தேன். விபத்து குறித்து அக்கம் பக்கம் இருந்தவர்களிடம் கேட்ட பொழுது எனது மனைவி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த பொழுது பின்னால் வந்த லாரி எனது மனைவியின் சக்கர வாகனத்தில் மீது மோதி நிலை தடுமாறி கவிழ்ந்து விட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ சாலையானது வளைவான சாலை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் எனது மனைவி வேலை செய்து வந்த வளர்மதி பள்ளிக்கும் சுமார் ஒரு கிலோமீட்டர் இருக்கும். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் லாரியில் மண்லோடு முழுவதுமாக இருந்தது என்றால் சரிதான். சம்பவ விபத்தானது எனது மனைவியின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றும் எதிரியின் அஜாக்கிரதையால் சம்பவ விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.19 19:09:38 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**